# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
கார்த்திகை 20
முஹறம் 5
புதன் (6-12-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 54
விலை சதம் 35


# சூறுவளி நிவாரணத்திலும் அரசியல் பாரபட்சமா?

## பிரசாரம் செய்யுமளவுக்கு உதவிகள் போய்ச்சேரவில்லை!

### மட்டக்களப்பில் பெரும் அதிருப்தி!

சூறுவளியினாலும்கடற்கொந்தளிப்பினாலும், மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண மக்களுக்கு அரசாங்க மட்டத்தில் நிவாரணம் வழங்குவதிலும் அரசியல் ரீதியான பாரபட்சம் காட்டப்படுகிறதா என்ற கேள்வி மட்டக்களப்பு மாவட்டத்தில் பலமாக எழுந்துள்ளது. இதுபற்றி அங்கு சென்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணிப் பா.உ.க்களிடம் பாதிக்கப்பட்ட மக்கள் புகார் செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதே சமயம், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் தினப்பத்திரிகைகளிலும் பெரிதாகப் பிரசாரம் செய்யும் அளவுக்கு அரசாங்கத்தின் நிவாரண உதவிகள் உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களின் கைகளுக்குப் போய்ச்சேரவில்லையென்றும் உயர்மட்ட அதிகாரிகளின் ஏனோதானோ மனப்பான்மையே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

சென்ற வாரம் தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உக்களான திருவாளர்கள் வெ. யோகேஸ்வரன், வி. தர்மலிங்கம், த. இராசலிங்கம், பி. எஸ். சூசைதாசன் ஆகியோர் கொழும்பிலிருந்தும், வி. ஆனந்தசங்கரி, தா. சிவசிதம்பரம் ஆகியோர் யாழ்ப்பாணத்திலிருந்தும் மட்டக்களப்புக்கு சென்று, அங்கு சில நாட்கள் தங்கியிருந்து நிவாரணப்பணிகளை அவதானித்தனர். மட்டக்களப்பு பா. உ. திரு. செ. இராசதுரை, பட்டிருப்பு பா. உ. திரு. பூ. கணேசலிங்கம் ஆகியோருடன் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப்பார்த்து ஆலோசனை நடத்தினர்; இவர்களிடம் பாதிக்கப்பட்ட மக்கள் தாங்கள் தமது குறைகளையும், தேவைகளையும் எடுத்துக் கூறினர்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் மீண்டும் 5.12.78 செய்வாய்க்கிழமை மட்டக்களப்புக்கு செல்கிறார். அங்கு நடைபெறும் நிவாரணப் பணிகளையும், அரசியல் பாரபட்சம் காட்டப்படுவதாக வந்துள்ள புகார்கள் பற்றியும் அவர் நேரடியாக ஆராய்வார்.

அமெரிக்கா, இந்தியா. இங்கிலாந்து, நியூசிலாந்து, உட்பட ஏராளமான நாடுகள் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள பொருட்களை இதுவரை இலங்கைக்கு விரைந்து அனுப்பியுள்ள போதிலும், அரசாங்க அதிகாரிகளின் விரைவான நடவடிக்கைகள் போதியளவு இல்லாததால், இந்த உதவிகள் சம்பந்தப்பட்ட மக்களுக்கு இன்னும் போய்ச் சேரவில்லையென்று குற்றம் சாட்டப்படுகிறது.

வீடுகளை இழந்து நிர்க்கதியாகியுள்ள குடும்பங்களுக்கு அமெரிக்கா அனுப்பிவைத்த கூடாரங்களைத்தானும் அரசு இன்னும் வழங்கவில்லையென்றும் மானத்தை மறைப்பதற்கு உடுதுணிகூட இன்றி, உணவின்றி பல இடங்களிலும் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னலுக்குள்ளாவதாகவும் சொல்லப்படுகிறது,

## கிழக்கிலங்கையில் சேவை புரிய பள்ளி மாணவர்கள்

சூறுவளியாலும், வெள்ளத்தாலும் பயங்கரமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் கிழக்கு மாகாண மக்களுக்கு சேவையாற்றுவதற்காக வட மாகாணத்திலிருந்து பாடசாலை மாணவர் குழுக்கள் அங்கு விரைவில் செல்லவிருக்கின்றன. ஒவ்வொரு தொகுதியிலும் ஐந்து பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 50க்கு குறையாத உயர்வகுப்பு மாணவர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்படும். இக்குழுக்களுக்கு ஆசிரியர்கள் பொறுப்பாக இருப்பர். இம்மாதிரி ஒவ்வொரு குழுவும் பாதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கிராமத்தில் சேவையில் ஈடுபடும் இம்மாதிரி ஒவ்வொரு குழுவுடனும் ஒவ்வொரு டாக்

—4-ம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பில் தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம்

சூறுவளியினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைப்புப்பணிகளில் ஈடுபடும் பொருட்டு தமிழ் அகதிகள் மறுவாழ்வுக்கழகம் மட்டக்களப்பில் தனது கிளையொன்றை நிறுவியுள்ளது. இக்கழகத்தின் தலைவராக பொறியாளர் திரு. மரியசிங்கம் அவர்களும், செயலாளராக ஜீ. சி. ஏ. வாஸ் அவர்களும், உறுப்பினர்களாக டாக்டர் ஆர். செல்லையா, டாக்டர் ஆர். கே. தியாகராசா, சுவாமி ஜீவானந்தாஜீ, வண' ஜோசெப்மேரி அடிகளார், ஜேன்கோட்டன் டி. எஸ். கே. வணசிங்க, ஆலாலசுந்தரம், த. கதிரவேற்பிள்ளை, காம். சோமநாதர், ஜனுப் காதர், ரி. பரமநாதன், ஆர். அம்பலவாணர், நல்லரத்னம், உமாபதிசிவம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். இந்தக் கழகக் கிளையின் முகவரி, 41, மத்தியவீதி, மட்டக்களப்பு'

# "காசி கைதுக்கும் கைக்குண்டு வீச்சுக்கும் சம்பந்தம் ஏதும் கிடையாது!"

### பிரதிபாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு!

மட்டக்களப்பு தொகுதி த. வி. கூ. அமைப்புச் செயலாளரும் கூட்டணியின் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான கவிஞர்காசி ஆனந்தன் கைது செய்யப்பட்டதற்கும், அங்குநடைபெற்ற வன்முறைச் சம்பவங்களும் தொடர்பு கிடையாதென்பதை பாராளுமன்றத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் திரு. வெரப்பிட்டியா ஒப்புக்கொண்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு செலவினங்கள் மீதான குழுநிலை விவாதத்துக்குப் பதிலளித்த போதே அமைச்சர் இதை ஒப்புக்கொண்டார். இக்குழு நிலை விவாதத்தின் போது விளக்கமறியலில் தற்போது வைக்கப்பட்டிருக்கும் காசி ஆனந்தன்.மாவை சேனாதிராசா. மற்றும் இளைஞர்களின் நிலை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கமும், கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரமும் எடுத்துரைத்தனர்.

இதுசம்பந்தமாக எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

''சமீபத்தில் எமது இளைஞர் இயக்கத்தலைவர்கள் கவிஞர் காசி ஆனந்தன்,

—4-ம் பக்கம் பார்க்க

## இருபதினாயிரம் ரூபாவை மகளிர் பேரவை திரட்டியது!

கிழக்குமாகாணத்தில் சூறுவளியால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் சகோதரர்களின் துயர்துடைப்பதற்காக ஒரு சில தினங்களில் 20,0062 ரூபா 30 சதத்தை தமிழ் மகளிர்பேரவையினர் யாழ்ப்பாணத்தில் திரட்டி த. வி. கூ. இணைப்பொருளாளர்திரு. சி. கதிரவேற்பிள்ளையிடம் ஒப்படைத்துள்ளனர், திருமதி மங்கை அமிர்தலிங்கம், திருமதி வி. யோகேஸ்வரன் ஆகியோர் தலைமையில் செல்விகள் மஞ்சுளா செல்வநாதன், தயாரதி நாகலிங்கம், பத்மினி சுப்பிரமணியம், வேதநாயகம் திருமதிகள் குணசிங்கம், ரி. மெய்ஞானசுந்தரம், ஆர். சண்முகலிங்கம், நல்லதம்பி, வேதநாயகம், செல்வி சுபாஷினி இராஜலிங்கம் ஆகியோர் உதவி நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இவர்கள் சென்ற இடமெங்கும் மட்டக்களப்பு மக்களுக்கு உதவுவதற்காக யாழ்ப்பாண மக்கள் மகிழ்ச்சியுடன் நிதி அளித்தனர்.


# சுடர்

(கார்த்திகை இதழ்)
இப்போது எங்கும் விற்பனையாகிறது

களையெடுத்தல் வேண்டும் —ஆசிரியத் தலையங்கம்
மேடை — நக்கீரன்
அந்த ஒருவன் வரவைத்தேடி —லலிதப் பிரியா
புத்தபிரான் ஏன் ஓடுகிறார் —முருகு
புண்ணியம் தேடும் பக்தகோடிகள்—சீர்மாறன்
அக்கிரமங்கள் அழிக்கப்படுகின்றன —முத்துமாதவன்
மற்றும் கவிதைகள். சுடர் வட்டம், துணுக்குகளுடன்.
விலை ரூபா ஒன்று மட்டுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்தை மீண்டும் புனரமைக்க வெளிநாடுகளின் உதவி அவசியம்!

## அவைகிடைப்பதற்கு அரசு முட்டுக்கட்டைபோடக்கூடாது!

அண்மையில் ஏற்பட்ட சூருவளியால் நேர்ந்த சேதங்கள், அழிவுகளை புனர்நிர்மாணம் செய்வது குறித்து ஐ. நா. சபையும் அக்கறை கொண்டிருப்பது வரவேற்கப்படத்தக்கதே. மட்டக்களப்பு, கல்முனை. உள்ளிட்ட சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் நேர்ந்திருக்கும் அழிவை குறுகிய காலத்தில் புனர் நிர்மாணம் செய்வதாயின் அதற்கு இலங்கை அரசின் சக்தி போதுமானதல்ல சாதாரண அபிவிருத்தித் திட்டங்களுக்கே பிறநாடுகளில் இருந்து கோடிக்கணக்கான பணத்தைக் கடனுகவும், கொடையாகவும் பெறும் நாம் இப்பாரிய அழிவுகள், சேதங்களைப் புனர் நிர்மாணம் செய்வதற்கு ஏனைய நாடுகளிடம் இருந்து நேரடியாக சம்பந்தப்பட்டப் பகுதிகளில் புனர் நிர்மாணவேலைகளைப் பொறுப்பளிக்கப் பின் வாங்கப்படாது.

முஸ்லிம் நகரங்களான கல்முனை, புத்தளம் போன்ற போன்ற நகரங்களிலும் பிற கிராமங்களிலும் ஏற்பட்டிருக்கும் அழிவுகளைப் புனர் நிர்மாணம் செய்வதற்கும் புதிய நகரங்களையே சம்பந்தப்பட்ட விடங்களில் நிர்மாணித்துத்தருவதற்கு எண்ணெய் உற்பத்தி நாடுகள் முன் வரலாம். அப்படிப்பட்ட நிவாரண உதவிகள் அனைத்தும் அரசாங்கத்தினூடாகவே அளிக்கப்படவேண்டுமென்று அகம்பாவத்துடன் அடம்பிடிக்காது கிடைக்கும் உதவி தீவில் எந்தப் பகுதியில் பயன்படுத்தப்பட்டாலும் தடைகூருது இருகை நீட்டி அதனை வரவேற்க வேண்டிய கால கட்டம் இது.

எதிர்க்கட்சித்தலைமையை ஏற்றிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அப்படியான உதவிகளை அரசு வரவேற்க வேண்டுமென வற்புறுத்த வேண்டும். அரசாங்கக் கட்சியிலும், எதிர்க் கட்சியிலுள்ள முஸ்லீம் உறுப்பினர்களும் அத்தகைய உதவிகள் எண்ணெய் வள நாடுகளிலும், இஸ்லாமிய நாடுகளில் இருந்தும் கிடைக்க முயற்சியெடுக்க வேண்டும். லிபியா, சவுதி அரேபியா ஈராக் போன்ற நாடுகள் வாய்ப்புக்கிடைத்தால் உதவுவதற்கு காத்துக் கொண்டே இருக்கும் சூழ்நிலை. அதுபோன்றே ஏனைய தமிழ்ப்பகுதிகளுக்கும் நோர்வே உள்ளிட்ட மேற்கு நாடுகள் அல்லது கிழக்கு நாடுகளது உதவி புனர் நிர்மாணவேலைகளுக்குக் கிடைக்கக் கூடுமாகில் பேச்சுவார்த்தை மூலம் அவற்றை தருவிக்க எதிர்க்கட்சித் தலைவர் முயல வேண்டும். அரசு முன்பு தமிழ்அகதிகள் புனர் வாழ்வுக்கு வவுனியாவில் ஒரு நகரை நிறுவ முன்வந்த போது போட்ட முட்டுக்கட்டை போன்று திரும்பவும் தடைவிதிக்காதிருக்க வேண்டும். இது விடயத்தில் தற்போது ஐ. நா. சபையே நேரடியாக அக்கறை கொண்டிருப்பதால் அரசாங்கம் மீண்டும் புதிதாக முட்டுக்கட்டைகள், தடைகள் எதையும் விதியாதிருக்கும் என எதிர்பார்ப்போம்.

நீதியமைச்சர் திரு. தேவநாயகம் தமது செல்வாக்கைப் பிரயோகித்து மேற்படி நிவாரண உதவிகள் மூலம் கிழக்கு மாகாண நகரங்களைப் புதிதாக நிர்மாணிக்க எத்தரப்பில் இருந்தும் முட்டுக்கட்டைகள் போடப்படாதிருக்கப் பார்த்துக் கொள்வாரென நம்புவோம்.

## அறப்போர் பற்றிய கருத்தரங்கில் கூட்டணியின் பிரதிநிதியாக சச்சிதானந்தன்

மனித உரிமைகள் மறுக்கப்படும் பொழுது அறப்போர் மூலம் அநீதி தலையெடுக்காது பாதுகாப்பது பற்றிக் காந்திவழிக் கருத்தரங்கு இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் தொடங்குகின்றது. இக்கருத்தரங்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பிலும் தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழு சார்பிலும் கலந்து கொள்ள திரு. க. சச்சிதானந்தன் திங்கள் கிழமை (27.11.78) இந்தியா பயணமானுர்.

காந்தி சமாதான நிறுவனத்தினுல் நடாத்தப்படும் இக்கருத்தரங்கு 15 நாட்களுக்கு நீடிக்கும். குஜராத் மாநிலத்தில் உள்ள சூரத் நகரில் 5 நாட்களும். காந்தி ஆசிரமங்களில் 5 நாட்களும் பின் மகாராஷ்டிர மாநிலத்தில் வர்த்தா நகரில் உள்ள சேவா கிராமத்தில் 5 நாட்களும் இக்கருத்தரங்கு நடைபெறும்.

உலக நலநிர்மாண சமிதி, கன்னியா ஆசிரமம், யந்திர வித்தியாலயம், வலூர்த் திட்டம் ஆனந்த நிகேதன், ஆசிரமம் பரோடா கலைக் கட்டடம், அமெதபாத், குஜராத் வித்தியாலயபீடம், சமர்மதி ஹரிஜன் ஆசிரமம் லோக்பாரதி கிராமிய முன்னேற்றத்திட்டம், ராஜ்கோட், காதி கிராம்யோக் உற்பத்தி நிலையங்கள் செளராஷ்டிர ரக்ஷ நட்மாக் சமித ஆகிய நிறுவனங்களையும் திரு. சச்சிதானந்தன் பார்வையிடுவார்.

மெக்சிக்கோவில் கடந்த ஆண்டு நடைபெற்ற மகாநாட்டின் தொடர்ச்சியாக நடத்தப்படும் இம்மகாநாட்டில் சிங்கள நாட்டில் இருந்தும் இளைஞர்கள் பங்குபற்றுகிருர்களென்பதுகுறிப்பிடத்தக்கது.

அறவழி நின்று கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தந்தைசெல்வா தலைமை தாங்கி நடாத்திய போராட்டங்கள் பற்றிய தொகுப்புக் கட்டுரை ஒன்றைக் கருத்தரங்கில் சச்சிதானந்தன் சமர்ப்பிப்பார் மேலும் ஈழத் தமிழர்களின் அறவழிப் போராட்ட வரலாற்றின் அடிப்படையான தமிழ் இன விடுதலை பற்றியும் தமிழ் மக்களின் உரிமைகள், அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டமை பற்றியும் விளக்குவதோடு, ஏனைய நாட்டு அறப்போராட்டத் திட்டங்கள் பற்றியும் அறிந்து வருவார். சிறப்பாக மேலைநாட்டு அறப்போராட்டக் குழுக்களுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவது பற்றியும் இக் கருத்தரங்கில் விரிவாக ஆராயப்படும்.

# தமிழர் கடைகளைப் பகிஷ்கரிக்க சிங்களவர்களைத் தூண்டுகிருர்

# 'தார்மீக' ஆட்சியின் பிரதியமைச்சர்

"தமிழர் விடுதலைக் கூட்டணியினரை நினைக்கும் போது எல்லாளன்—துட்டகைமுனு மன்னர்களின் காலம்தான் நினைவுக்கு வருகிறது. அவர்கள் காலத்தில் இந்த நாட்டை துட்டகைமுனு அபிவிருத்திசெய்ய முயன்றபோது சிலர் எல்லாளனுக்குப்பின்னுல் சென்று நாட்டை அழிக்கவே வழிவகுத்தனர். தமிழ்ஈழக்கோரிக்கைக்கு எதிராகச் சிங்கள மக்கள் இயக்கம் ஒன்றை நடத்தவேண்டும். சிங்களமக்களுக்கு இந்த நாட்டை விட்டால் இருப்பதற்கு வேறுநாடு இல்லை. தமிழர்களுக்கு இலங்கையை விட்டால் இந்தியா இருக்கிறது. தமிழ் ஈழம் கேட்பவர்கள் இலங்கையை விட்டு இந்தியா சென்று கேட்கவேண்டும். தமிழ் ஈழம் கேட்பவர்களை இந்தியாவுக்குச் செல்லுங்கள் என்று சிங்கள மக்கள் உறுதியாகக் கூற வேண்டும். தமிழ் ஈழம் கேட்கும் தமிழர்களின் கடைகளில் சிங்கள மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்யாமல் பகிஷ்கரிப்பு நடத்த வேண்டும்."

—விளையாட்டுத்துறை பிரதியமைச்சர் எட்வின் திலகரத்தின.

* * *

"இந்நாட்டில் மூன்று இராஜதானிகள் இருக்கவில்லை. தமிழ் இராச்சியம் எதுவும் இங்கு இருந்ததில்லை கோட்டை இராச்சியம் மட்டுமே யிருந்தது. ஒரேயொரு தமிழ் மன்னன் எல்லாளன் மட்டும் சில காலம் ஆட்சி நடத்திஞன். பின்னர் துட்டகைமுனுவால் கொல்லப்பட்டான். அத்தோடு அவனது ஆட்சியும் முடிந்தது."

—அமைச்சர் கப்படன் செனிவிரத்திஞ.

* * *

தமிழர் விடுதலைக்கூட்டணியினரும் தமிழர்களும், முன்பொருமுறை ஜனதிபதி கூறியதுபோல பிறப்பினுல் சிங்களவர்கள்தான். 'வடுகொட' என்ற சிங்களப் பெயரே வட்டுக்கோட்டையாகியுள்ளது. ஹுனுகம என்ற சிங்களப் பெயரே 'சுன்ஞகம்' ஆயிற்று.

—திவுலப்பிட்டி யூ. என். பி. பா. உ. திரு. ஜெயதிலக.

"சிங்கள இரத்தம் எங்கள் உடலில் ஓடும்வரை நீங்கள் கேட்கும் தமிழ்ஈழம் உங்களுக்கு ஒருபோதும் கிடைக்காது. இலங்கை ஒரே நாடு இங்கு பிரிவினைக்கு இடமில்லை!"

—தங்கல்லை பா. உ. திரு. ஜினதாச வீரசிங்க (யூ. என். பி.)

* * *

"இந்தச் சபையில்பேசும் தமிழர்விடுதலைக்கூட்டணி பா. உக்கள் அனைவரும் தனிநாடு வேண்டும், தமிழ் ஈழம் வேண்டும் என்பது பற்றியே பேசுகிருர்கள்.

—உடதும்பற பா. உ. திரு. ஏ. எம். ஆர். பி. அத்தநாயக்கா, (யூ. என். பி.)

* * *

"நான் ஒரு தமிழஞக இருந்தால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் போன்றே தமிழ் உரிமைக்காக வார்த்தைகளில் மட்டும் நிற்காது ஓரளவு பலாத்காரத்திலும் நான் இறங்கியிருப்பேன். அந்த அளவுக்கு தமிழ் மக்களின் பிரச்சினையை நான் புரிந்துகொண்டிருக்கிறேன். எண்ணுயிர ஆண்டுகால கலாசாரப் பாரம்பரியத்தை கொண்டவர்கள் தமிழ் மக்கள். இறைவனையே பரத நாட்டியத்தின் மூலம் மக்கள் முன்பு நிலைநிறுத்தும் கலையம்சம் கொண்டவர்கள் தமிழ் மக்கள். அப்படியான பெருமைக்குரியவர்களை நாம் ஒருபோதும் இரண்டாந்தரப் பிரஜைகளாக நினைக்கவில்லை. சர் பொன். இராமநாதன் சிங்களத்தலைவர்களுக்காகப் போராடியிராவிட்டால், டி. எஸ். சேனநாயகாவும், ஏ. இ. குணசிங்காவும் உயிருடன் இருந்திருக்கமாட்டார்கள். நமக்குள்ள சுதந்திரமும் விடுதலையும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இருக்கவேண்டும் என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

—ராஜாங்க அமைச்சர் ஆனந்ததிஸ்ஸ டீ. அல்விஸ்.

(பாராளுமன்றத்தில் பேசப்பட்டவை)

## சரிந்ததே தமிழ் வாழ்வு

மதியறு விதியே எங்கள்
வாழ்விலேன் சதியைச்
செய்தாய்
கதியறு தமிழர் வாழ்வில்
கவலையை நீயேன் தந்தாய்?

முறிந்தன பெரு மரங்கள்
இடிந்தன கட்டி டங்கள்
சிதைந்தது கிழக்கு ஈழம்
சரிந்ததே தமிழர் வாழ்வு.

தவிக்குதே தமிழர் கூட்டம்
கொதிக்குதே குமுறி நெஞ்சம்
வெடிக்குதே ஐயோ எங்கள்
வாழ்விலேன் கோரம்
செய்தாய்?

இல்லையா இதய முன்றன்
தொல்லைகள் எமக்கேன்
தந்தாய்
அல்லலுற் றலையு மெங்கள்
எல்லையில் அழிவேன்
செய்தாய்?

—க. கோபிநாத்—

## இளைஞர் குரல்

இப்பொழுது
விற்பனையாகிறது!

பல புதிய அம்சங்கள்—தேர்தல் பற்றிய பகுப்பு ஆய்வு, விடுதலை வீரர்கள் பற்றிய வரலாறு, இளைஞர் பேரவையின் நிலைப்பாடு ஆகியன கொண்டு புதிய பொலிவுடன் வெளிவந்து விட்டது.

விலை சதம் 60 மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுகூடி நன்றி சொல்வோம் அமைச்சர் சிறில் மத்தியூவுக்கு!

"எமக்கேன் இந்த வம்பு" "எப்படியும் வாழ்ந்து விட்டுப் போவோம்" என்றும்... ஜே. ஆரின் தர்மிஷ்ட ஆட்சியில் எல்லாம் கிடைக்கும், கிடைத்துவிட்டது என இறுமாந்திருந்த, மயக்கத்தில் இருந்த எமது சமுதாயத்தின் அறிவாளிகள் கண்களைத் திறக்க—மயக்கத்தினின்றும் தெளிவு பெறச் செய்த மந்திரி அவர்களே! எமது கோடி நன்றிகள் உமக்கு! என்னே உமது பெருந்தன்மை! தமிழினம் மேலும் மேலும் ஒன்று சேரவேண்டும் அவர்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்பவேண்டும்— உறங்கவிடலாகாது என்பதில் தான் உமக்கு எவ்வளவு அக்கறை? முழுமூச்சோடு நீர் இயங்குவதற்கு தலைவணங்க வேண்டும் நம் சமுதாயம்—இதற்கு நன்றிகூற எமக்கு ஒரு வாய்போதாதையா!

முன்பெல்லாம் எத்தனை எத்தனையோ பரீட்சைகள் வந்து வந்து போய்விட்டன. எவனெவனே எம்மை ஆண்டுவிட்டுப் போய்விட்டான். யாராலும் கண்டு பிடிக்கமுடியாததொரு அதிசயத்தை நீர் கண்டுபிடித்து விட்டீரே உமது அபார மூளைக்கு என்ன கொடுத்தாலும் போதாது. அன்றெல்லாம் தமிழன் யார் எவர் வைத்த பரீட்சைகளில் எல்லாம் வெற்றிப்படியின் முன்னணியில் தான் நின்றான். அந்நியப் பரீட்சைகளிலும் அவனே தான் முன்நின்றான். இன்றும் அவனே நிற்கிறான். வெளிநாடுகள் நடத்திய பரீட்சைகளின்விடைத்தாள்களைத்திருத்த அங்கு தமிழனா இருந்தான்? ஏனய்யா உமக்கு இந்தப் பித்தலாட்டம்? தமிழனுக்கு விசேஷமாக மூளையைக் கடவுள் படைத்திருக்கிறான் என்றோ, நாம் தான் மூளைசாலிகள் என்றோ தமிழன் சொல்லவில்லை. கொடுத்தமூளையைப் பாவித்து முன்னேற்றப் பாதையில் செல்ல அவன் என்றும் பின்நின்றதும் இல்லை. இதைக் கண்டு உமக்கும் உம் இனவாதவழியில் நிற்கும் சகாக்களுக்கும் ஏனய்யா இந்த வயிற்றெரிச்சல். எப்படியும் அவனை இழிவுபடுத்தவேண்டும் மானபங்கப் படுத்த வேண்டும் அவன் மீது சேற்றை வாரி வீச வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு திரிகின்றீர்களே!

எத்தனை விதத்தால் அவனை இழிவு படுத்தினீர்கள் அவன் சொத்தெல்லாம் உங்கள் ஆட்சியில் சூறையாடப்பட்டது. அவன் உயிர் பந்தாடப்பட்டது. அவன் இரத்தத்தைக் குடித்து ஏப்பம்விட்டார்கள், சிங்கள் வெறியர்கள். அவன் நிலத்தையெல்லாம் பறித்து அவனைப் பிச்சைக்காரனாகத் துரத்தினீர்கள் உங்கள் ஆட்சியில்; அவனைக் கள்ளத் தோணி என்று நாடுகடத்தினீர்கள் எல்லாம் செய்தும் வெறி அடங்கவில்லையா.

இன்று கடைசியாக இறைவன் கொடுத்த சொத்தும் அவன் ஒரே ஒரு சொத்துமான கல்வியில் அவன் முன்நின்று மேலோங்கிநிற்பதைக் காணச் சகிக்கமுடியாது இதிலும் இழிவுபடுத்தவேண்டும் என்று ஒரு பொய்யான பிரச்சாரத்தை செய்து அதற்கு உமது அதிகாரத்தைப் பயன்படுத்தி முக்கியத்துவத்தைக் கொடுத்து போர்க்கொடி பிடிக்கின்றாயே! அதர்மமும் அநியாயமும் அதிகநாள் நீடிக்காது.

அதிகாரம் உன்கையில் இருக்கும்போது இன்று தமிழினம் நம்பிஇருப்பது தர்

**ஊர்மிளா**

மத்திலும் நேர்மையிலும் ஆண்டவனிலும் தானய்யா; அதிகாரம் உன்கையில்என்ற ஆணவத்தில் பிதற்றுகின்றாய்; பத்திரிகைக்கும்பேட்டியென்ற போர்வையில் பிதற்றுகின்றாய்.

தர்மிஷ்ட ஆட்சி என்று சொல்லிக்கொண்டு நீங்கள் செய்யும் அநியாயத்தைத் தட்டிக்கேட்க ஆண்டவன் படியிறங்கிவரத்தான்போகிறான்; தமிழன் ஒருகுரல் எழுப்பி இன்னும் ஆண்டவனிடம் அழுதுபுலம்பவில்லை தன் வேதனைகளை; என்னைப்போல் சில உள்ளம் அழுது வேதனைபடுவது போல் தமிழன்னையின் புதல்வர் எல்லோரும் வேதனைப்படும் நாள் வரத்தான் போகிறது. அதற்கு உன்னைப்போல் மனிதர் பலர் வேண்டும். ஆகவே வேதனையிலும் உனக்கு நான் நன்றி சொல்லத் தவறவில்லை. எம் இனத்தின் வேதனைக்குரலே ஒரே குரலாக இறைவனிடம் போய்ச்சேரும் போது உன் அதர்மம் வெல்லுமா என்று பார்ப்போம்.

"தரப்படுத்தலை நீக்கிவிட்டோம்." தமிழன் கேட்டதையெல்லாம் கொடுத்துவிட்டேன் தமிழ் ஈழத்தைத் தவிர — இதனால் சிங்களமக்கள் என்னோடு கோபிக்கிறார்கள் அதிகம் கொடுத்துவிட்டேன் என்று; அவனுக்கு மயக்கத்தையும், ஆத்திரத்தையும் கொடுத்து, உலகத்தினர் கண்களுக்கும் அவனைக் கீழ்தரமாக்கியாவது உனது தரப்படுத்தலை அமுல்படுத்தி விடுவோம் எனத் தீவிரமாக முன்னேறிக்கொண்டிருக்கிறாயே அது மட்டுமா உன் நோக்கம்? இதுவரை பல்கலைக் கழகத்திற்குள் புகுவதற்கான பரீட்சைகளுக்குத்தான் தரப்படுத்தல் அமுலாக்கப்பட்டிருந்தது. ஒரு படி முன்னேறி இனி பல்கலைக்கழகத்திற்குள்ளும் நடக்கும் பரீட்சைகளுக்கும் இதைப் புகுத்தும் திட்டத்துடன் நீ செயல்படுவது உனது பயங்கரமான திட்டத்தை வெளியாக்குகின்றது.

தமிழனை ஒதுங்க விடுகின்றாயும் இல்லை. அவன் ஒதுங்கிவிட்டால் அவன் மூளையின்றி உன்னை உன்னால் தனித்து ஆளமுடியுமா என்ற பயம் ஒன்று உனக்கு. அடுத்தது அவன் பிரிந்துவிட்டால் தனது மூளைப்பலத்தைக் கொண்டு இஸ்ரேலைப்போல் முன்னேறி விடுவானோ, பலம் வாய்ந்த ஒரு பகைவனைப் பக்கத்தில் வைத்து தாக்குப்பிடிக்க முடியுமா என்றது அடுத்த பயம். அவனை எந்த விதத்தாலும் குட்டிக் குட்டி ஒரு பக்கமாக முடக்கும் நோக்கம் ஒன்றே உனது: எமது அடுத்த சந்ததியினர் உனக்கு கைகட்டி சேவகம் யார்க்கும் ஒரு பரம்பரையாக வரவேண்டும் என்பதே உனது நோக்கமா?

இன்று எமது கல்விமான்களில் எல்லாம் சேற்றை வாரி இறைக்கின்றாயே எதற் [illegible] உனது [illegible]

ஒருகுறையும் இன்றி தர்மிஷ்டையில் வாழவைக்கிறோம் என உலக அரங்கெல்லாம் கேட்க மார்தட்டினாரே உன் தலைவர் அவரின் முகத்திரை கிழித்தெறியப்பட்டு விடுமே என்று அஞ்சுகின்றாயா? தரப்படுத்தலை மீண்டும் எப்படி அமுலுக்கு கொண்டு வரலாம் என உம்மைப் போன்ற தீவிர இனவாதிகள் ஒன்றுகூடி சிந்தித்து கடைசியில் அந்த மரமண்டை மூளைகளில் எதுவுமே தட்டாமல், இப்படியாவது தமிழனை இழிவுபடுத்தி பொய்ப் பிரசாரம் ஒன்றைச் செய்து இன ரீதியில் முக்கியத்துவம் கொடுத்து—மக்களின் கண்களுக்கு ஒரு மறைப்பதற்காக. இதில் உனது அரசாங்கத்தின் கையகலாத்தனத்தை உன்னையறியாமலே உலகத்திற்கு எடுத்துக் காட்டுகின்றாய் என்பது உன் மூளைக்கு ஏனோ தென்படவில்லை.

இதுவரை கல்வி அமைச்சிடம் இருந்து எந்தவொரு அறிக்கையும் வரவில்லை. அந்த அமைச்சினது விவகாரம் எடுத்துச் சொல்லவும் நீர் தானா கிடைத்தீர்? அந்த அமைச்சின் விவகாரத்தில் உமக்கு ஏன் இவ்வளவு அக்கறை? இதுவே உமது அப்பட்டமான இனவாதத்தை வெளிப்படுத்தவில்லையா? அந்த அமைச்சிற்கு அமைச்சர் இல்லையா? இன்றேல் பிரதி அமைச்சர் அல்லது செயலாளர் இவர்கள் எல்லோரும் எங்கே? இதன் பின்னணி என்னவென்று ஒரு நாள் உண்மை வெளிப்படத்தான் போகின்றது.

தர்மிஷ்ட ஆட்சி என்ற போர்வையின் கீழ் நீங்கள் எல்லோரும் செய்யும் அட்டூழியங்களை எல்லாம் நீங்கள் தெருத்தெருவாக சிலை எடுத்து வணங்கும் புத்த பிரானே பொறுத்துக் கொள்ள மாட்டான். புனித புத்தரின் நாமத்தைச்சொல்லவோ அருகதை அற்றவர்கள் நீங்கள்.

யூதரைப்போல் அபார மூளைசாலிகளைக் கொண்ட தமிழினமே! இது நீ போற்றிப் பாதுகாக்கும் உன் சுய கௌரவத்திற்கு ஒருசவால்! அன்று யூதர் இருந்த நிலையில் இன்று நாம் இருக்கின்றோம். மெத்தப்படித்து நிறைந்த மூளையுடன் தலைகனத்த எண்ணங்களுடன் யாரின் தலைமைக்கும் மதிப்புக் கொடுக்காமல், பிரிந்து உலகெங்கும் பரந்து. எமது மூளைப் பலத்தினாலும் உடலாலும் மற்றும் நாடெல்லாம் முன்னேற வழிசெய்து சுயநலம், சுயகௌரவம் ஒன்றையே பெரிதாகக் கொண்டு இனப்பற்று மொழிப்பற்று, நாட்டுப் பற்று இன்றி, கண்டதே கோலம் எனத்தான்தோன்றித்தனமாக இருக்கும் உனக்கு இதோ கடைசி ஆயுதத்தையும் பயன்படுத்தி சவால் விடுகிறான் ஒரு அதிகம் படித்த கல்விமான், தர்மிஷ்ட பச்சைப் பாம்பு உலகத்திற்கு நல்ல பாம்பு வேஷம் போட்டுக்கொண்டு நஞ்சைக் கக்கிக்கொண்டிருக்கின்றது; இனியாவது தமிழன் பதவி ஆசைகளை விட்டு பேதங்களை மறந்து தமிழன்என்ற இன உணர்ச்சியிலாவது ஒன்று சேருகின்றானா என எமது உள்ளத்தைத் தொட்டுப் பார்க்கின்றார்களோ என்னவோ? உன் மீது சேற்றை வாரி வீசி எறிந்து உன் மானத்தையும் விலைபேசுகின்றானடா மாற்றான் உலக அரங்கில்.

எது எப்படியாயினும்...... மந்திரி அவர்களுக்கு ஒரு சபாஷ் போடத்தான் வேண்டும்—எமது இனத்தில் உறங்கிக்கொண்டிருந்த ஒருபகுதியினரின் உணர்ச்சிகளைவிழித்தெழச் செய்து நீங்களும் தமிழர்கள் தானடா, உங்களுக்கும் அவ்வினத்தின் விடுதலையில் பங்கிருக்கின்றது என உணரச் செய்தீர்களே. அதற்காக உம்மைப்போல் எத்தனையோ சிறில் மத்தியூக்கள் தோற்ற வேண்டும் எனத் தமிழ்க் கடவுளாகிய கலியுகவரதனை வேண்டுவோம் நன்றியுடன். நிச்சயம் உமக்கு தமிழன் தன் தாய்த்திருநாட்டின் விலங்கொடிபட்டதும் தனது ஆட்சியில் ஒரு சிலை எடுப்பான் எனநம்புகின்றேன். தமிழன் நன்றி மறவாதவன்.

## சோரணையற்ற தமிழனுக்கு இனியாவது சூடுபிறக்கட்டும்!

## அனுதாபம்

"கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சூறுவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், இயற்கையின் கோரப்பசிக்கு இரையாகித் தவிக்கும் உடன் பிறப்புக்களுக்கும் ஏற்பட்ட துன்பத்தைக் கண்டு தவிக்கின்றோம்"

மேற்படி தீர்மானம் மானிப்பாய் தமிழர் விடுதலை கூட்டணிக் கிளையினால் நிறைவேற்றப்பட்டது. திரு. சி. முத்துக்குமாரசாமியின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி சேகரிப்பு மிகதுரிதமாக நடைபெறுகிறது.

## கப்டன் செனிவிரத்தினவின் வரலாற்றுத் திரிப்பு!

### கண்டி சிங்களவர் சீற்றம்!

இலங்கையில் கோட்டை இராச்சியம் ஒன்று மட்டுமேயிருந்தது; வேறு எந்த ஒரு இராச்சியமும் இருந்ததாக வரலாறே கிடையாது; என்று அண்மையில் பாராளுமன்றத்தில் தொழிலமைச்சர் கப்டன் சி.பி.ஜே. செனிவிரத்தின கூறியிருந்தாரல்லவா? அமைச்சரது இக்கூற்றையிட்டு கண்டிப்பகுதி சிங்களப் பா. உ.க்களும், கண்டியைச் சேர்ந்த சிங்களப் பிரமுகர்களும், அறிஞர்களும் கண்டிப்பகுதி சிங்கள மாணவர்களும் கடும் சீற்றம் அடைந்துள்ளனர்.

இலங்கையில்கண்டிஇராச்சியம் ஒரு தனி இராச்சியமாக சீரோடும் சிறப்போடும், கொடியோடும் முடியோடும் தனித்து இயங்கி வந்திருக்கிறது. 1815ம் ஆண்டில்தான் கண்டிஇராச்சியம் அன்னிய ஆதிக்கத்திடம் வீழ்ச்சியடைந்தது. இதை அண்மையில் இந்தியா சென்றிருந்த ஜனாதிபதிஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களே ஏற்றுக்கொண்டு "தமது நாடு" 1815ல் தான் அன்னியனிடம் வீழ்ச்சிடைந்ததாக கூறியிருக்கிறார். கோட்டை இராச்சியம்

—4-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வேதனைக் கடலில் மிதக்கும் ஈழத்தமிழர்க்கு இயற்கையால் இப்படி ஒரு சோதனையா?

## உலகத் தமிழர்களின் உதவிக்கரம் இலங்கையை நோக்கி நீளட்டும்"

### கருணாநிதியின் உருக்கமான வேண்டுகோள்!



மிரட்டிக் கொண்டிருந்த புயல் கொந்தளிப்பு, இறுதியாக இலங்கைச் சீமையில் நுழைந்து பெரும்பாலான தமிழர்கள் உள்ளிட்ட இலங்கை மக்களை விழுங்கி விட்டிருக்கிறது. தமிழகத்திலும் மண்டபம், இராமேஸ்வரம் போன்ற முகவைமண்டிலப்பகுதிகளிலும், தஞ்சை, மற்றும் சில மாவட்டங்களிலும்—மீண்டும் உதகையிலும் பெருங்காற்று' வெள்ளம் புகுந்து மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பெருஞ்சேதம் இழைத்துள்ள செய்திகள் நெஞ்சைக் குலுக்குகின்றன.

இலங்கையில் துயர்துடைப்புப் பணிகளுக்காக இந்தியாவின் சார்பில் நூறுடன் அரிசியும், பத்தாயிரம் பேர்களுக்குத் துணியும், மற்றும் கூடாரத் துணிகள் போர்வைகளும் மத்திய அரசால் அனுப்பி வைக்கப்படுகிறது என்ற செய்திபாராட்டத்தகுந்ததாகும். ஏற்கனவே இலங்கையின் வேண்டுகோளுக்கேற்ப மத்திய அரசு இலங்கைக்கு ஆவ்ரோ விமானமும், ஹெலிகாப்டரும் அனுப்பி வைத்துள்ளது. தமிழக அரசின் சார்பில்மத்திய அரசு மூலமாக பத்து லட்ச ரூபாய் மதிப்புள்ள துயர்துடைப்புப் பொருள்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தமிழக நிதியமைச்சர் மனோகரன் அவர்கள் அறிவித்திருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இந்திய அரசோ, தமிழக அரசோ, மற்ற நாடுகளோ இலங்கைக்குச் செய்யும் உதவிகள் தார்மீக உணர்வுகளைப் புலப்படுத்தப் பயன்படுமேயல்லாது இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுஞ்சேதத்திற்கு முழுமையான பரிகாரம் வழங்கிட இயலாது. ஆகவே இலங்கை அரசாங்கம். துயர் தணிப்புப் பணிகளுக்காக பெருந் தொகையைச் செலவிட முன்வர வேண்டும்.

இலங்கையில் பெரும்பாலும் தமிழ்மக்கள் வாழும் பகுதிகள் கடல் அலைகளின் பெருந்தாக்குதலுக்கும் புயலின் சீற்றத்துக்கும் உள்ளாகியுள்ளன. தொடர்ந்து பல வேதனைகளுக்கு ஆளாகிவரும் இலங்கைத் தமிழர்களுக்கு இப்படியொரு இயற்கையின் சோதனையும் ஏற்பட வேண்டுமா? ஏக்கப் பெருமூச்சு தான் விடையாகக் கிடைக்கிறது!

மூத்தோர், முதியோர், இளையோர், மழலைகள் என எத்தனை எத்தனை உயிர்களைக் கடலும் காற்றும் தங்கள் கொடுமைக்கரங்களால் பிணங்களாகக் குவித்திருக்கின்றன! தம் குடும்பச்செல்வங்களை இழந்து கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் இலங்கை மக்களுக்கு அதிலும் பெரும்பாதிப்புக்கு ஆளாகியுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு உலகநாடுகள் பலவற்றிலும் பரவிக்கிடக்கும் தமிழ் இன மக்கள் தங்கள் ஆறுதலைத் தெரிவிக்கவும்—தாங்கள் வாழுகின்ற நாடுகளில் உள்ள அரசுகளின் மூலம்முறைப்படிநிவாரண உதவிகளை வழங்கிடவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். தார்மீக அடிப்படையில்—மனிதாபிமான உணர்வுடன் அளிக்கப்படும் ஆறுதலும் சிறிய உதவிகளும் கூட பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு நம்பிக்கையூட்டத்தக்க வகையில் அமையும்!

தி.மு. கழகத்தின் சார்பில் அடையாள பூர்வமாகவும் ஆழ்ந்த உணர்வோடும்நிவாரண நிதித் தொகையை இலங்கைக்குவழங்க,முறைப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

துயருற்றோரைக் கண்டு துடித்து, ஓடிச்சென்றுஉதவிகளைச் செய்து பழக்கப்பட்ட செயல் வீரர்களின் பாசறை நமது கழகம்! அந்தக் கழகத்தின் சார்பில் இப்போது சிறிய அளவு நிவாரணத் தொகை இலங்கைக்கு முறைப்படி அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.

இதைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள தமிழர்கள் மட்டுமன்றி உலகு முழுதும் பரவிக்கிடக்கிற தமிழ்மக்கள் தங்களால் இயன்ற உதவிகளை பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு உடனடியாக அளித்திட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"உலகில் உள்ள தமிழர்களையெல்லாம் கேட்டுக் கொள்ள உனக்கென்ன உரிமை?" என்று யாரும் வினவமாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

வேண்டுகோள் விடுக்க நான் உரிமையெடுத்துக் கொள்ளத் தேவையில்லை. இது உறவென்னும் உணர்வின்பாற்பட்டது! எனவே எங்கு வாழும் தமிழராயினும் அவர்கள் வழங்கும் சிறிய நிவாரணம்; அவர்கள் வாழும் நாட்டின் முறைகளுக்கேற்ப— இலங்கை நோக்கிச் செல்லட்டும்!

—இவ்வாறு முரசொலி மூலம், திமுக தலைவரும் தமிழ் நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான கலைஞர் மு. கருணாநிதி வேண்டுகோள்ஒன்றைவிடுத்துள்ளார்.

## காசி கைதுக்...

—1-ம் பக்கத் தொடர்

மாவைசேனாதிராசா போன்றோர் செப்டம்பர் 6 ம்திகதி புதிய அரசியல்சட்டத்தைப் பகிஷ்கரிக்கும்படி துண்டுப் பிரசுரம் வினியோகித்ததற்காக கைதுசெய்யப்பட்டார்கள். இதற்கு வழக்கு நடைபெற்றது. இளைஞர் சார்பில் நல்லூர்ப் பிரதிநிதி ஆஜரானார். தீர்ப்பு அடுத்த நாளைக்கு ஒத்திவைக்கப்பட்டது. அடுத்தநாள் பொலிசாரால் திடீரென்று முன்பு சொல்லப்படாத புதிய அறிக்கையொன்று தாக்கல் செய்யப்பட்டது. அவர்களுக்கு கிடைத்த தகவலின்படி முதலாவது அறிக்கையை தாக்கல் செய்த பின்னர், மறுநாள் புதிய மற்றோர் புதிய அறிக்கையை ஏன் தாக்கல் செய்ய வேண்டும்? வீண் சந்தேகங்களை அறிக்கையில் குறிப்பிட்டு நிரபாரதிகளான இந்த இளைஞர்களை சிறையில் வைப்பதற்கு நட்வடிக்கையெடுக்கப்பட் டுள்ளது, இந்த இளைஞர்கள் மீது உடனே வழக்குத் தொடரப்பட னேண்டும், அல்லது இவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்"

கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது;

"புதிய அரசியல் சட்டத்துக்கு எதிராக துண்டுப்பிரசுரம் விநியோகித்தமைக்காக கைது செய்யப்பட்ட காசி ஆனந்தனும், மாவை சேனாதிராசாவும் மற்றும் இளைஞர்களும் இப்போது வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் தொடர்ந்து சிறை வைக்கப்பட்டுள்ளனர். முன்னைய அரசு அவசரகாலச் சட்டத்தின் கீழ் இவர்களையும் இன்னும் பலரையும் 28 மாதங்கள் சிறை வைத்தது. இப்போது இந்த அரசு பொலிசாரைப்பயன்படுத்தி நீதிநிர்வாகச் சட்டத்தின் கீழ் அவர்களைக் காவலில் வைத்துள்ளது. அவர்கள் தற்சமயம் தங்களது உற்றார், உறவினர்கள், பெற்றோர்களுக்கு கூறு வளியினால் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ள முடியாமல் கண்டிச் சிறைச் சாலையில் வாடுகின்றனர்.

"இந்த இளைஞர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருந்தால். நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யச் செய்யுங்கள். அப்போது அவர்கள் தமது சார்பில் வாதிடுவார்கள். ஆனால் வழக்குத்தாக்கல் செய்யாது நீண்டகாலத்துக்கு அவர்களை விளக்கமறியலில் ஏன் வைத்திருக்கிறீர்கள்"

இதற்கு பதிலளித்துப் பேசிய பிரதிபாதுகாப்பு அமைச்சர் திரு. வெரப்பிட்டியா கூறியதாவது:

"காசி ஆனந்தனும் மற்றவர்களும் கைது செய்யப்பட்ட சமயத்தில் புதிய அரசியலமைப்பு பிரகடனக் கொண்டாட்டங்கள் தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளக்கொழும்பு புறப்பட்ட பாடசாலை மாணவிகளின் பேருந்துக்கு கைக்குண்டு வீசிப்பட்டது. இதில் சில மாணவிகள் காயமடைந்தனர். ஒரு மாணவியின் பெற்றார் வீட்டுக்கும் கைக்குண்டு வீசப்பட்டது. துண்டுப்பிரசுரம் விநியோகித்துக்கொண்டிருக்கையிலேயே காசி ஆனந்தன் கைதானார்.

நல்லூர்பா.உ. சிவசிதம்பரம்; கைக்குண்டு வீசப்பட்ட சம்பவத்துக்கும் காசிஆனந்தன் கைது செய்யப்பட்ட சம்பவத்துக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது. மட்டக்களப்பில் இடம்பெறும் எல்லாக் கைக்குண்டு வீச்சுக்களுக்கும் காசி ஆனந்தன் தான் பொறுப்பா?

திரு. வெரப்பிட்டியா: நான் அப்படிக்கூறவில்லையே கைக்குண்டு வீச்சுக்காரணம் அல்ல. [illegible] சம்பவத்தின் பின்னணியையே விபரித்தேன்.

## கிழக்கிலங்கை..

—1-ம் பக்கத் தொடர்

டரும் செல்வார். இந்தச் சேவைக் குழுவுக்கான உணவு, தங்குமிடம் போன்ற வசதிகளை யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கிழக்கிலங்கை புனர்வாழ்வு உதவிக்குழுசெய்து கொடுக்கும்:

இந்த முடிவுகள் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைச் செயலகத்தில்திரு.அ. அமிர்தலிங்கம் பா. உ. தலைமையில் 3-12-78ல் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில்எடுக்கப்பட்டுள்ளன

இக்கூட்டத்தில் "கிழக்கிலங்கை புனர் வாழ்வு உதவிக் குழு" அமைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களும், இணைப் பொருளாளர்களாக திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும், இணைச்செயலாளர்களாக திரு. தே. ப. அகஸ்தியர், திரு. க. நடராசா ஆகியோரும், குழுவின் உறுப்பினர்களாக டாக்டர் பி. அம்பிகாபதி, டாக்டர் பொன். சத்தியநாதன்(யாழ் வளாக மருத்துவ பீடம்) வி.என். நவரத்தினம் பா.உ. திரு. சின்னத்துரை, சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், திரு. ஏ. கே. ராமலிங்கம், திருமதி. வி. யோகேஸ்வரன், என். தியாகராசா, திரு. நித்தியானந்தம் (இலங்கை பஸ் தொழிலாளர் கழகம்) திரு. மெற்ருஸ் மயில் (அ.எ.வி. சங்கம்) ஆகியோர்தெரிவு செய்யப்பட்டனர். தமிழ் இளைஞர் பேரவைப் பிரதிநிதிகளும் இதில் இடம் பெறுவார்கள்.

மட்டக்களப்புக்கு யாழ்ப்பாணத்திலிருந்து லொறி மூலம் கொண்டு செல்லப்படும் பொருட்கள் அனைத்தும், புனையில் தடுக்கப்பட்டு மட்டக்களப்பு அரசாங்க அதிபரிடம் அவற்றை ஒப்படைக்குமாறு கோரப்படுகிறதாக சொல்லப்பட்டதையடுத்து இதுசம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று அறிவிக்கப்பட்டது.

## மனித உரிமைகள் நாள் கருத்தரங்கு

இடம்:- தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப்பணியகம், யாழ்ப்பாணம்.

நாள்; 9-12-78 சனி மாலை 6-30 மணி.

தலைப்பு: சட்டரீதியாக மீண்டுவிட்ட இறைமையை தமிழ் ஈழம் எங்ஙனம் பிரயோகிக்கலாம்?

பேசுவோர்: சட்டத்தரணி சி. கதிரவேற்பிள்ளை பா.உ, சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம், சட்டத்தரணி பார்லட்.

## கப்டன் செனி..

—3-ம் பக்கத் தொடர்

வீழ்ச்சியடைந்த பின்னரும் 1815 வரை நீடித்து நிலைத்து நின்றது கண்டி இராச்சியம். இந்த அப்பட்டமான உண்மையை மூடிமறைத்து, வரலாற்றையே திரிக்கின்ற முயற்சியில் அமைச்சர்இறங்கியிருக்கிறார். இது கண்டிய சிங்களமக்களின் பாரம்பரியப் பெருமைக்கே திரையிடுவதாக அமைந்துள்ளது.

இப்படி அமைச்சர் கண்டி சிங்கள மக்களின் தனித்துவத்தையே மறுத்துப்பேசியதற்குக் காரணம் என்ன? இந்நாட்டின் ஆண்டபரம்பரையான கண்டிச் சிங்களவர்களை ஒதுக்கிப் புறக்கணித்துவிட்டு கரையோரச் சிங்களவர்களின் ஆதிக்கத்தைக் கொண்டுவரும் ஒரு முயற்சியா இது?

இவ்வாறு கண்டியைச் சேர்ந்த சிங்கள அறிஞர்கள் கேட்கின்றனர்.





திருப்திகரமான சலவைக்கு மில்க்வைற் நீலசோப் வாங்கி உபயோகியுங்கள்

மில்க்வைற் நீல சோப் புதுப் பொலிவுடன் விற்பனையாகிக்கொண்டிருக்கின்றது. மேலுறைகளை அனுப்பி பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற்-யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 6ம் திகதி.புதன்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org